அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 26/2025

எனது இலக்கம் : EST-7/06/UNI/X
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2025.10.24

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதமச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## ஆரம்ப புலனாய்வுகளுக்கான கொடுப்பனவு

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 2014.05.30 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 14/2014 தொடர்பில் உங்களின் கவனத்தை ஈர்க்கின்றேன். அதில் குறிப்பிட்டுள்ள செலுத்துகைகள் 2025.10.01 ஆந் தினத்திலிருந்து பின்வரும் பிரகாரம் திருத்தம் செய்யப்படுகின்றது.

02. தாபன விதிக்கோவையின் தொகுதி II இன் அத்தியாயம் XLVIII இன் பிரிவு 13 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆரம்ப புலனாய்விற்காக நியமிக்கப்படும் உத்தியோகத்தரொருவருக்கு பின்வரும் படி கொடுப்பனவுகள் செலுத்தலாம்.

| **நிறைவேற்றப்பட்ட பணி** | **கொடுப்பனவு ( ரூ .)** | |
|---|---|---|
| | **இரண்டாம்நிலை/ மூன்றாம் நிலை மட்டத்திலுள்ள ஓர் அலுவலர்** | **நிறைவேற்று/ சிரேஷ்ட நிறைவேற்று மட்டத்திலுள்ள ஓர் அலுவலர்** |
| ஆரம்ப புலனாய்வு அறிக்கை சமர்ப்பிப்பு | 3,000/- | 4,000/- |
| குற்றப்பத்திரிகைகளை வரைவு செய்து மர்ப்பிப்பு | 1,000/- | 1,000/- |

03. ஆரம்ப புலனாய்வு அலுவலரினால் இங்கு இணைப்பு 01இல் குறிப்பிடும் மாதிரிக்கமைவாக ஏடு ஒன்றினை நடாத்துதல் வேண்டும் என்பதுடன் அவ் ஏட்டினை இறுதி அறிக்கையுடன் உரிய அதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். மேற்படி பந்தி 2இல் குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுகளை பெறுவதற்கு இவ் ஏட்டினை பூர்த்தி செய்து சமர்ப்பிப்பது கட்டாயமாகும். ஏதேனும் ஆரம்ப புலனாய்வினை மேற்கொள்வதற்காக அலுவலர் ஒருவருக்கு பதிலாக குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பின், குழுவின் ஒவ்வொரு உறுப்பினர்களும் தனித்தனியாக இவ் ஏட்டினை பேணுதல் வேண்டும். அத்தோடு, குழுவின் உறுப்பினர்களுக்கு வெவ்வேறாக மேற்படி பந்தி 02இல் குறிப்பிடப்படும் கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வதற்கு உரித்துண்டு.

04. மேற்படி படிகளுக்கு மேலதிகமாக ஆரம்ப புலனாய்வு அலுவலரொருவருக்கு அவர் அரச சேவையில் வகிக்கும் பதவியினை அடிப்படையாகக் கொண்டு தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க பயணச் செலவுகள் மற்றும் இணைந்த படிகளை பெற்றுக் கொள்வதற்கு உரித்துடமை காணப்படுகின்றது.

05. ஓய்வு பெற்ற அலுவலர் ஒருவர் ஆரம்ப புலனாய்வு அலுவலராக பயன்படுத்தப்படின் அவ் அலுவலருக்கும் இவ் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கொடுப்பனவுகள் செய்ய முடிவதுடன், அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் போது அவர் வகித்த பதவியினை அடிப்படையாகக் கொண்டு தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க பயணச் செலவுகள் மற்றும் இணைந்த படிகளை பெற்றுக் கொள்வதற்கு உரித்துண்டு.

06. மேற்படி பந்தி 02லுள்ள படிகளை பெறுவதற்கு ஆரம்ப புலனாய்விற்காக குறித்துரைக்கப்பட்ட காலஎல்லையினுள் அவ் விசாரணை முடிவுறுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், முறையான ஒழுக்காற்று புலனாய்வினை நடாத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருப்பின், குற்றப்பத்திரிகை வரைவினை முடித்து சமர்ப்பிப்பதும் அவ் கால எல்லைக்குள் செய்திருத்தல் வேண்டும். ஆரம்ப புலனாய்விற்கான தினங்களை நியமிக்கும் போது நிகழ்வு தொடர்பில் சரியான புரிந்துணர்வுடன் நியாயமான காலத்திற்குள் ஆரம்ப புலனாய்வு அலுவலரிடம் சமர்ப்பிப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

07. ஆரம்ப புலனாய்வு அலுவலரோ அல்லது குழுவோ முறையான நேர முகாமைத்துவத்துடன் ஆரம்ப புலனாய்விற்கு வழங்கப்பட்டுள்ள காலத்திற்குள் அதனை விரைவாக முடிவுறுத்த வேண்டும். ஏதேனும் காரணத்தினால் ஆரம்ப புலனாய்விற்கு வழங்கப்பட்ட காலத்தினை விடவும் தாமதமானால் அத்தகைய ஆரம்ப புலனாய்விற்காக கீழ்வரும்படி படிகளை வழங்க முடியும்.

| **குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு அப்பால் ஏற்படும் தாமதம்** | **பந்தி 03 இல் குறிப்பிடும் படியிலிருந்து செலுத்தப்பட வேண்டிய வீதம்** |
|---|---|
| ஒரு மாதம் அல்லது அதனை விடக் குறைந்தது | 75% |
| ஒரு மாதத்திற்கு மேற்பட்ட 02 மாதம் அல்லது அதற்கு குறைந்த | 60% |
| 02 மாதத்திற்கு மேற்பட்ட 03 மாதங்கள் அல்லது அதற்கு குறைந்த | 50% |

08. 03 மாதங்கள் கடந்த பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆரம்ப புலனாய்வு அறிக்கைக்காக படிகள் செலுத்தப்பட மாட்டாது.

09. ஆரம்ப புலனாய்வு அலுவலரிடம் அல்லது குழுவிடம் மேற்படி பந்தி 02 ற்குரிய கொடுப்பனவுகளை செய்வதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படும் ஆரம்ப புலனாய்வு அறிக்கையின் தரம் தொடர்பிலும் உரிய அதிகாரியினால் கவனத்தை செலுத்த வேண்டும் என இத்தால் விலியுறுத்தப்படுகின்றது.

10. நிலையான கடமையாக புலனாய்வு நடவடிக்கைகள் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அவர்களின் நிரந்தர கடமைகளின் கீழ் எடுக்கப்படும் புலனாய்வுகள் தொடர்பாக மேற்படி பந்தி 02 இல் குறிப்பிடும் படிகள் உரித்தாகமாட்டாது.

11. 2025 ஆம் ஆண்டில் இதற்கான மேலதிக மானியங்களை கோராதிருத்தல் வேண்டும்.

12. இவ் சுற்றறிக்கையானது பொதுத் திறைச்சேரியின் உடன்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது


ஒப்பம்/ எஸ். ஆலோகபண்டார

செயலாளர்

பொது நிர்வாக, மாகாண சபைகள்

மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 011-2697233

தொலைநகல் : 011-2692158

மின்னஞ்சல் முகவரி : ade-vii@pubad.gov.lk

இணைப்பு 01

**<u>ஆரம்ப புலனாய்வு அலுவலர் ஒருவரால் பேணப்பட வேண்டிய ஏடு</u>**

ஆரம்ப விசாரணையினை நடாத்தும் அலுவலரின் பெயர் :-

ஆரம்ப விசாரணையினை நடாத்தும் அலுவலரின் நிலையான பதவி :-

ஏதேனும் சேவைக்குரியவராயின் அச் சேவை :-

சம்பள அளவுத்திட்டம் மற்றும் தற்போதைய சம்பளம் :-

தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்கள்

கையடக்கத் தொலைபேசி :-
அலுவலகம் :-
வதிவிடம் :-

ஆரம்ப புலனாய்விற்கு நியமிப்பதற்கான ஆதாரம் :-

சம்பவத்திற்குரிய நிறுவனம் :-

தலைமை அலுவலகம் இல்லையெனில் உரிய நிகழ்வு நடந்த உப அலுவலகம் :-

| **தினம்** | **ஆரம்பித்த நேரம்** | **முடிவுறுத்தப்பட்ட நேரம்** | **நிறைவேற்றப்பட்ட பணி (பொருட்களை/ பணத்தினைப் பரிசோதித்தல், ஆவணங்களைப் பரிசோதித்தல், சான்றுகளைப் பதிவு செய்தல்)** | **பணம்/ பொருட்கள்/ ஆவணங்கள் என்பவற்றுக்குப் பொறுப்பாகவுள்ள ஆளின் கையொப்பம் அல்லது சாட்சிகளை பெற்றுக் கொடுத்தவர்களின் கையொப்பம்** |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |

மேலே குறிக்கப்பட்ட நேரத்தில் மேற்படி பணிகளில் ஈடுபட்டேன் என நான் வெளிப்படுத்துகின்றேன்.

........................ ..........................................................

தினம்

ஆரம்ப புலனாய்வு அலுவலரின்
கையொப்பம்